**OS. 55/2017**

**நாள்.28.04.2022.**

**வா.சா. 1 –** முகம்மது முஸ்தபா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 2, 3, 9 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டார்....

<u>2, 3, 9 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

பிராதில் 4 முதல் 7 இலக்க சொத்துக்களுக்கு பட்டா என் தகப்பனார் பெயரில் இருப்பதாக கூறியுள்ளேன் என்றால்சரிதான். ஆனால் 4 முதல் 7 இலக்க சொத்துக்களுக்கு பட்டா என் தகப்பனார் பெயரில் இருப்பதை காட்டுவதற்கு ஆவணம் போடவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் 2ம் பிரதிவாதி கைவசத்தில் தான் இருக்கிறது. 4 முதல் 7 இலக்க சொத்துக்களுக்கு செட்டில்மெண்ட் பட்டா நம்பர் என்ன என்று தெரியாது. பட்டா பாஸ் புத்தகம் 1973 ல் கொடுக்கும் போது அதன் பட்டா நம்பர் என்ன என்று எனக்கு தெரியாது. 1984ல் கொடுக்கப்பட்ட யுடிஆர் பட்டா நம்பரும் எனக்கு தெரியாது. இந்த சொத்திற்கு நான் வரி செலுத்தியதற்குண்டான ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிராதில் 4ம் இலக்க சொத்தாக சர்வே நம்பர் 195/1 ஏ காட்டியுள்ளேன். அந்த சொத்து என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணம் போடவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கைவசத்தில் தான் அந்த ஆவணம் இருக்கிறது. என்னுடைய பிராதில் ஆவணங்கள் அனைத்தும் 2ம்பிரதிவாதியின் கைவசத்தில் இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிரூபணவாக்குமூலம் பாரா 5ல் சொல்லியுள்ள விவரங்கள் எதையும் என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். சர்வே நம்பர் 331/1, 331/2 ஆகிய சொத்துக்கள் என் தாயார் பெயரில் இருக்கிறது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 18.01.2016 தேதியிட்ட பட்டா மாறுதல் சம்மதமான வாக்குமாறா சம்மத ஸ்டேட்மெண்ட் ஜெராக்ஸ் நகலில் உள்ள முதலாவது கையெழுத்து சதக்குத்தம்பி, 2வது கையெழுத்து சீனி ஜகுபர், 3வது கையெழுத்து அப்துல்காதர், 4வது கையெழுத்து நைனா முகம்மது., 5 வது கையெழுத்து லியாகத் அலிகான் ஆகியோருடையது என்றால் சரிதான். அதில் உள்ள 6 வது கையெழுத்து சையது இர்சாத் என்பவரது கையெழுத்து அல்ல. சையது இர்சாத் என் மகன் தான். அவருக்கு சொத்தில் சம்மந்தமில்லை. அந்த ஆவணத்தில்

கையெழுத்து போட்டுள்ள நபர்கள் அனைவரும் நோட்டரி பப்ளிக் முன்னிலையில் கையெழுத்து போடவில்லை என்று கூறுகிறேன். அந்த ஆவணத்தில் என் சார்பில் என் மகன் சையது இர்சாத் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரியல்ல. என் மகன் சையது இர்சாத்திற்கு 2ம் பிரதிவாதியின் மகளான இவ்வழக்கில் கண்ட 15ம் பிரதிவாதியை திருமணம் செய்து வைத்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் வாதி சீனி சகுபரும், நானும் மற்றும் 11ம் பிரதிவாதி அமீர்சாதிக் ஆகிய மூவரும் துபாய், கொழும்பு, பாங்காங் நாடுகளில் அல்முஜாமா டிரேடிங் என்ற பெயரில் தொழில் செய்து வந்தோம் என்றால் தவறு. பாங்காங்கில் நான் மாணிக்கம் தொழில் மட்டுமே செய்து வந்தேன். உண்டியல் தொழில் செய்யவில்லை. கீழக்கரை கிழக்கு தெரு ஜமாத் தலைவர் சேகு அபுபக்கர் சாகிபு என்பவரை தெரியுமா என்றால் தற்போது வழக்குக்கு பின்னால் தான் தெரியும். 1ம் வாதி சீனி சகுபரும், நானும் மற்றும் 11ம் பிரதிவாதி அமீர்சாதிக் ஆகிய மூவரும் துபாய், கொழும்பு, பாங்காங் நாடுகளில் செய்துவந்த தொழிலில் கொடுக்கல் வாங்கல் தொழிலில் நாங்கள் மோசடி செய்தது சம்மந்தமாக 2ம்பிரதிவாதியிடம் கீழக்கரை கிழக்கு தெரு ஜமாத் தலைவர் சேகு அபுபக்கர் சாகிபு என்பவரை வைத்து மேலத்தெரு ஆட்களுக்கு கொடுக்கவேண்டிய பணம் சம்மந்தமாக சேகு ஜமாலுதின், சம்சுதின், சதக் ஆகியோர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசப்பட்டதில் எனக்காக என் அண்ணன் 2ம்பிரதிவாதி தனது சொத்துக்களை நான் கடன்பட்ட நபர்களுக்காக கொடுத்துள்ளார் என்றும் , அப்படி கொடுக்கப்பட்ட சொத்தை முகம்மது சதக்குத்தம்பி தன்னுடைய மகன் அமீர்சாதிக் என்பவருக்கு இனாம் கொடுத்து நான் பட்ட கடனுக்காக அமீர்சாதிக் தனக்கு இனாமாக கிடைத்த சொத்தை 18, 19 பிரதிவாதிகளுக்கு எந்தவித மறுபயனும் இல்லாமல் கிரயம் எழுதிக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அந்த விவரம் எல்லாம் கீழக்கரை கிழக்கு தெரு ஜமாத் தலைவர் சேகு அபுபக்கர் சாகிபு என்பவரை விசாரித்தால் தெரிய வரும் என்றால் சரிதான். தற்போது சாட்சி உண்மை தெரிய வரும் என்று கூறுகிறார். 15, 16, 17 பிரதிவாதிகள் நாங்கள் மூவரும் பெற்ற கடனுக்காக 20, 21 பிரதிவாதிகளுக்கு மேற்கண்ட படி சொன்ன பஞ்சாயத்து அடிப்படையில் எந்தவித மறுபயனும் இல்லாமல் கிரயம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து கீழக்கரை சிட்டி யூனியன் வங்கிக்கு அருகில் இருந்தது என்றால் சரிதான். அந்த சொத்து 300 ச.அடி ஆகும். கீழக்கரையில் உள்ள சொத்துக்கள் எல்லாம் தற்போது விலைமதிப்புமிக்க

சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த சொத்தை 2ம் பிரதிவாதியின் மனைவிக்கு நாங்கள் அனைவரும் சேர்ந்து எந்தவித மறுபயனும் இல்லாமல் கிரயம் எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். பணம் வாங்கிக்கொண்டு தான் கிரயம் கொடுத்தோம். 4ம் இலக்க சொத்து ஆதியில் சீனிமுகம்மது பெயரில் இருந்தது என்றால் சரிதான். சீனிமுகம்மதுவின் மக்கள் பெயர் சீ. நைனா முகம்மது மற்றும் நூர் முகம்மது என்றால் சரிதான். அவர்கள் இருவரும் சேர்ந்து 07.03.1990 ல் வா.சா.ஆ.15ப்படி பரிவர்த்தனை பத்திரம் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் கண்ட 1ம்இலக்க சொத்து பழைய பட்டா நம்பர் 193 புதிய பட்டா நம்பர் 502, பழைய சர்வே நம்பர் 195 என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் 13 ஏக்கர் 24 சென்ட். அந்த சொத்தில் வடக்கு பாதி சொத்திற்கு என்.எஸ். நைனா முகம்மது என்ற என் அண்ணன் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.15ல் கண்டதில் பாதி என்று சொல்லியுள்ள சொத்தானது என்.எஸ்.நைனா முகம்மது நிலம் என்றால் சரிதான். சர்வே நம்பர் 195ல் கண்ட பாதி சொத்துக்கு முகம்மது அலியார் பெயருக்கு பட்டா நம்பர் 193 இருந்தது என்றும், மீதமுள்ள பாதி சொத்தான சர்வே நம்பர் 195/1 ஏ–ல் கண்ட சொத்துக்கு நைனா முகம்மது பெயரில் பட்டா நம்பர் 505 யுடிஆர் காலத்தில் வழங்கப்பட்டது என்றால் அவருக்கு 1984ல் பட்டா வழங்கப்பட்டது. அந்த சொத்தில் தான் என் அண்ணன் 2ம்பிரதிவாதி, 3ம்பிரதிவாதிக்கு 2 ஏக்கர் நிலத்தையும், 1ம் பிரதிவாதிக்கு 1 ஏக்கர் 16 சென்டையும், மீதமுள்ள சொத்துக்கள் அனைத்தையும் 15, 16, 17 பிரதிவாதிகளுக்கு இனாம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். குறிப்பாக தாவா 4ம் இலக்க சொத்து என்னுடைய குடும்ப சொத்துகிடையாது என்றும், 2ம் பிரதிவாதி பெயரில் இருந்த அன்பினாலும், பாசத்தினாலும், பிரியத்தினாலும் முகம்மது அலியார் குடும்பத்தில் உள்ளவர்கள் சர்வே நம்பர் 195/1 ஏ–ல் கண்ட பட்டா நம்பர் 505ல் கண்ட சொத்தை சுமார் 40 வருடங்களுக்கு முன்னாலேயே ஹிபா மூலம் கொடுத்துவிட்டார்கள் என்றும் அதன் அடிப்படையில் அந்த சொத்து 2ம் பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. அந்த சொத்தில் எனக்கு பங்கும், பாத்தியமும், அனுபவமும் கிடையாது என்றால் சரியல்ல. சர்வே நம்பர் 331/1, 331/2 ஆகிய சொத்துக்களில் எனக்கு எந்தவித பங்கும், பாத்தியமும், அனுபவமும் கிடையாது என்றால் சரியல்ல. ஏற்கனவே சொன்ன குடும்ப ஏற்பாட்டின் படி கடந்த 18.01.2016ம் தேதி மேற்கண்ட சர்வே நம்பர் 331/1, 331/2 ஆகிய சொத்தை

2ம் பிரதிவாதி ஹிபா என்னும் நன்கொடை மூலமாக கொடுக்கப்பட்டு அவர் அச்சொத்தை அடைந்து தன் பெயருக்கு பட்டா மாறுதல் செய்து அச்சொத்துக்களை தன்னுடைய தனிப்பட்ட சொத்தாக வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. அந்த சொத்திலும் எனக்கு எந்த காலத்திலும் கூட்டு பாத்தியம் மற்றும் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. திருத்தப்பட்ட பிராதில் கண்ட சர்வே நம்பர் 330/1, 330/2 ல் கண்ட சொத்துக்களுக்கு 2ம்பிரதிவாதி பெயரில் 1984 ம் ஆண்டிலேயே பட்டா கிடைத்துவிட்டது என்றால் சரிதான். சர்வே நம்பர் 330/1, 330/2 ல் கண்ட சொத்துக்களுக்களில் எனக்கு எந்த காலத்திலும் கூட்டு பாத்தியம் மற்றும் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. பிராது 4 முதல் 7 இலக்க சொத்துக்களுக்குரிய விளக்கங்கள் என்னுடைய அசல் பிராதில் ஒருவிதமாகவும், திருத்தப்பட்ட பிராதுகளில் வேறு விதமாகவும் இருப்பதால் அவைகளுக்குரிய எதிர்வாதத்தை இந்த பிரதிவாதிகளால் தங்களுடைய எதிர்வழக்குரையில் ஆட்சேபித்துக்கொள்ள முடியவில்லை என்றால் சரியல்ல. வாதிகளாகிய நாங்கள் ஏற்கனவே இதே நீதிமன்றத்தில் இதே பிரதிவாதிகள் மீது இதே சொத்துக்களுக்கு தாக்கல் செய்த ஓ.எஸ்.நம்பர். 35/2016 வழக்கை நாங்கள் வாபஸ் பெற்றதாக பொய்யாக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. அப்படி வாபஸ் எதையும் வாங்கவில்லை என்றும் அந்த வழக்கை நாங்கள் மேல்நடத்தாமல் வலியுறுத்தவில்லை என்று மெமோ தாக்கல் செய்ததன் அடிப்படையில் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், அதனால் அதே வழக்கு மூலத்தின் அடிப்படையில் அதே பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சரியான சொத்து விவரங்களை சொல்லவில்லை என்றும், சொத்துக்களில் உள்ள அம்சங்களை சரியாக குறிப்பிடவில்லை என்றும், சொத்துக்களுக்கான மதிப்பை சரியான முறையில் மதிப்பீடு செய்யவில்லை என்றும், சரியான நீதிமன்ற முத்திரைக்கட்டணம் செலுத்தவில்லை என்றும், இவ்வழக்கானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுவிட்டது என்றும், ஏற்கனவே நடந்த சமரசங்களில் தாவா சொத்துக்களுக்கு எனக்கு பங்கு வேண்டாம்என்று ஒப்புக்கொண்டுவிட்டு தற்போது அதற்கு விரோதமாக தாவா சொத்துக்களில் பாகம் கோருவதற்கு முரண்தடைபட்டுள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் நாங்கள் எந்த காலத்திலும் கூட்டு அனுபவத்தில் இல்லை

என்றும், தாவா சொத்துக்களை வாதிகளை எல்லாம் விலக்கி 2ம் பிரதிவாதி தன்னுடைய தனிப்பட்ட கைவச அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்துவந்து 1, 3, 15 முதல் 17 பிரதிவாதிகளுக்கு இனாம் செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்து அவர்கள் அடைந்து அனுபவம் செய்துவந்து 18 முதல் 21 பிரதிவாதிகளுக்கு சில சொத்துக்களை விற்பனை செய்து 18 முதல் 21 பிரதிவாதிகள் தாங்கள் கிரயம் பெற்ற சொத்துக்களுக்கு பட்டா பெற்று அவர்கள் தனித்து அனுபவம் செய்து வந்து அவர்கள் கிரயம் பெற்ற சொத்துக்களை பல பிளாட்டுகளாக பல நபர்களுக்கு கிரயம் செய்து கொடுத்ததன் பேரில் கிரயம் வாங்கிய நபர்கள் அந்த சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் வாதிகளுக்கு நேரடியாக தெரியும் என்றும், ஆனால் அதனை மறைத்து 1, 3, 15 முதல் 17 பிரதிவாதிகளை மிரட்டி பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் அவர்களுக்கு வீண்கஷ்டம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றும் நான் தாக்கல் செய்துள்ள பிராது நிலைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

<u>18, 19, 21 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

தாவா 4ம் இலக்க சொத்து 2ம்பிரதிவாதி நைனா முகம்மதுவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 2ம்பிரதிவாதியிடமிருந்து வடபுறம் 1 ஏக்கர் 16 சென்ட் அளவுள்ள நிலத்தை 22.07.2016ம் தேதி 1ம்பிரதிவாதி இனாம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மேற்படி சொத்தை 16.08.2016 ம் தேதி அவரது மகனான 11ம் பிரதிவாதிக்கு இனாம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவா 4ம் இலக்க சொத்தில் உள்ள மேற்படி 1 ஏக்கர் 16 சென்ட் அளவுள்ள நிலத்தை பொருத்து 11ம் பிரதிவாதி 30.08.2016 ம் தேதி 18, 19 பிரதிவாதிகளுக்கு கூட்டாக கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1 ஏக்கர் 16 சென்ட் அளவுள்ள சொத்தை பொருத்து 18, 19 பிரதிவாதிகள் பெயரில் கூட்டாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 ஏக்கர் 16 சென்ட் அளவுள்ள சொத்தில் 18ம் பிரதிவாதிக்குரிய பாதி பங்கு சொத்தை பொருத்து 19ம் பிரதிவாதிக்கு பொதுஅதிகார ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட ஆவணங்களின் அடிப்படையில் 19ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பகுதி சொத்தில்

19ம் பிரதிவாதி செட் ஒன்றை அமைத்து வரிபதிவு ஏற்படுத்தி, மின் இணைப்பு ஏற்படுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்திற்கு தென்புறம் உள்ள 58 சென்ட் நிலத்தை பொறுத்தும், நடுப்புறம் 2 ஏக்கர் 54 சென்ட் நிலத்தை பொறுத்தும் 2ம் பிரதிவாதி 09.08.2016ம்தேதி அவரது மக்களான 15 முதல் 17 பிரதிவாதிகளுக்கு இனாம் செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பகுதி சொத்தை மேற்படி 15 முதல் 17 பிரதிவாதிகள் அனுபவம் செய்துவருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட 09.08.2016 ம் தேதியிட்ட இனாம்செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட சொத்தில் தென்புறம் 58 மற்றும் 26 சென்ட் நிலத்தை பொருத்து 03.02.2016 ம் தேதியிட்ட கிரயப்பத்திரம் மூலம் 20 மற்றும் 21 பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 20 , 21 பிரதிவாதிகள் மேற்படி சொத்தை பொருத்து 19ம்பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் தெரியாது. பொது அதிகாரம் பெற்ற 19ம் பிரதிவாதி மேற்படி சொத்தில் நடுப்பகுதியில் 31 1/2 சென்டில் பாதை அமைத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 19ம்பிரதிவாதி மேற்படி பாதைக்கு மேல்புறம் உள்ள 83 சென்ட் நிலத்தை பொறுத்து 10.07.2020 ம் தேதி ராஜா கிருஷ்ணன் என்பருக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. அச்சொத்தை பொறுத்து ராஜா கிருஷ்ணன் என்பவர் பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் தெரியாது. ராஜா கிருஷ்ணன் மேற்படி சொத்தில் 10 சென்டை நாகேஸ்வரன் என்பருக்கு 16.09.2020ம் தேதி கிரயம் கொடுத்துள்ளார் என்றும், அதே தேதியில் ராஜா கிருஷ்ணன், விஜயகுமார் என்பவருக்கு 11 சென்ட் நிலத்தை கிரயம் கொடுத்துள்ளார் என்றும் சொன்னால் தெரியாது. கிரயதாரர்கள் கைவச அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 19ம் பிரதிவாதி அவர் சார்பாகவும் 18, 20, 21 பிரதிவாதிகளின் சார்பாகவும், பவர் ஏஜெண்ட் என்ற முறையில் தென்புறமாக 85 1/2 சென்ட் நிலத்தை பொறுத்து ஜகுபர் நிசா என்பவருக்கு 10.07.2020 தேதியிட்ட கிரயப்பத்திரப்படி கிரயம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் தெரியாது. ஜகுபர் நிசா பெயரில் அச்சொத்துக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் தெரியாது. சகுபர் நிசா 10.46 சென்டை பொறுத்து ஆர். ராஜ்குமார் என்பவருக்கு 23.12.2020ம் தேதி கிரயம் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. மேற்படி கிரயச்சொத்தானது சர்வே நம்பர் 195/1 ஏ 3 பி2 என்று உட்பிரிவு செய்யப்பட்டு ராஜ்குமார்

பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. ஜகுபர் நிசா இதர பகுதி சொத்தில் 17.34 சென்டை பொறுத்து எஸ். சுனைதா என்பவருக்கு 30.06.2021ம் தேதி கிரயம் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. அந்த சொத்துக்கு அவர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. கிரயம் பெற்ற நபர்கள் தனித்தனியே வேலி அடைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் 2ம்பிரதிவாதி நைனா முகம்மது தான் வேலி அடைத்துள்ளார். தாவா 4ம் இலக்க சொத்தில் எனக்கோ மற்ற வாதிகளுக்கோ எவ்வித பங்கு பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. பிராதில் நாங்கள் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(மேலும் மேற்கண்ட குறுக்கு விசாரணைக்கு கூடுதலாக மேற்கண்ட 2, 3, 9 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்டுள்ள குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக 18, 19, 21 பிரதிவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.)

<u>மறு விசாரணை– இல்லை.</u>